மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# இடைக்கால தமிழ்ச் சமூகத்தில் தேவதாசிகள்: சிற்றிலக்கியங்களின் வழியாக ஒரு மதிப்பாய்வு

# Devadasis in Medieval Tamil Society: A Study through Minor Literary Texts

ச. ஜீவானந்தம் / S. Jeevanandam[1]

[1]Assistant Professor, Centre for Women's Studies, School of Social Sciences, Jawaharlal Nehru University, New Delhi.

Date of Submission: 15-02-2026
Date of Acceptance: 31-05-2026
Date of Publication: 30-06-2026
Corresponding Author's Email: contactjeevanandam@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வுக் கட்டுரை, இடைக்கால தமிழ்ச் சமூகத்தில் கோவில் தொடர்புடைய தேவதாசிகள் வகித்த இருமுகப் பாத்திரத்தையும், அவர்கள் எதிர்கொண்ட முரண்பாடுகளையும் சிற்றிலக்கியங்களின் வழியாக ஆய்வு செய்கிறது. ஆரம்பகால கல்வெட்டுகள், தேவதாசிகள் கோவில் வாழ்வில் அங்கீகரிக்கப்பட்டும் மங்களகரமானவர்களாகக் கருதப்பட்டும் இருந்த நிலையைச் சுட்டுகின்றன. எனினும், பிற்கால கல்வெட்டுகள் அவர்கள் ஒழுக்கச் சிதைவு மற்றும் கோவில் அதிகாரிகளால் சுரண்டப்படுதல் பற்றிய குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்துகின்றன. இந்த மாற்றத்தை, 'தனிப்பாடல் திரட்டு' மற்றும் 'விறலிவிடு தூது' போன்ற சிற்றிலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. அருணகிரிநாதர், காளமேகம் போன்ற கவிஞர்களின் படைப்புகளிலும், பல 'விறலிவிடு தூது' காப்பியங்களிலும் (தெய்வச்சிலையார், மூவரையன், சேதுபதி, நண்ணாவூர், கூளப்பநாயக்கன்), தேவதாசிகளின் அழகு-கலை திறன் பாராட்டப்படுவதும், மறுபுறம் அவர்கள் பாலியல் சுரண்டல், பொருளாதார சிதைவு மற்றும் சமூக விமர்சனங்களுக்கு உள்ளாவதும் சித்தரிக்கப்படுகின்றன. இந்த ஆய்வு, இலக்கிய ஆதாரங்களின் இணைந்த பார்வை வழியாக, இடைக்காலத் தமிழ்ச் சமூகத்தின் ஆணாதிக்க, மத மற்றும் பொருளாதார அமைப்புகளுக்கு இடையே தேவதாசிகள் எப்படி சிக்கிக் கொண்டார்கள் என்பதையும், அவர்களின் 'புனித' நிலை காலப்போக்கில் எவ்வாறு சீரழிவுக்கு உள்ளானது என்பதையும் வெளிப்படுத்துகிறது.

**கருச்சொற்கள்:** தேவதாசி, சிற்றிலக்கியங்கள்

### Abstract

This research article examines the dual role played by devadasis in medieval Tamil society and the contradictions they encountered, as reflected in chitrilakkiyam (minor literary genres). Early inscriptions indicate that devadasis were recognized within temple life and regarded as auspicious figures. However, later inscriptions reveal allegations of moral decline and their exploitation by temple authorities. This transformation is emphasized in minor literary works such as Thanipadal Thirattu and Viralividu Thoothu. In the writings of poets like Arunagirinathar and Kalamegam, as well as in several Viralividu Thoothu compositions (Deivachilaiyar, Muvaraiyan, Sethupathi, Nannavur, and Koolappanayakkan), devadasis are portrayed on the one hand as admired for their beauty and artistic skills, and on the other as subjected to sexual exploitation, economic decline, and social criticism. Through a combined reading of these literary sources, this study highlights how devadasis became trapped between the patriarchal, religious, and economic structures of medieval Tamil society, and how their "sacred" status gradually deteriorated over time.

**Keywords:** Devadasi, minor literature (chitrilakkiyam)

**முன்னுரை**

ஆணாதிக்கச் சமூகக் கொள்கைகளின்படி, குடும்பம் புனிதமானதாகக் கருதப்பட்டது; பெண்களின் பங்கு அதற்குக் கீழ்ப்படிந்ததாகவே வரையறுக்கப்பட்டது. பெண்களின் பாலியல் ஒழுக்கம் கடுமையாக விதிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டது. இடைக்காலத்தில், கோவிலின் சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்ட தேவதாசியுடன் கூடிய தொடர்பு மங்களகரமானதாகக் கருதப்பட்டது. தேவதாசி மங்களகரமானவர் என்ற சமூக அங்கீகாரம், இந்திய பெண்கள் அனைவரும் அனுபவித்த கடுமையான கட்டுப்பாடுகளிலிருந்து அவர்களைப் பகுதியளவில் விடுவித்தது. எனினும், இடைக்காலத்திற்குப் பின்னான சான்றுகள் தேவதாசிகளின் நிலைமையில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுகின்றன. பயணக்குறிப்புகளும், சிற்றிலக்கியங்களும் தேவதாசிகளின் ஒழுக்கச் சிதைவைக் குறிப்பிடுகின்றன. இதன் விளைவாக, தேவதாசியுடன் தொடர்பு கொண்டிருப்பது ஒழுக்கக்கேடான செயல் எனக் கருதப்பட்டது.

மலையடிபட்டியில் உள்ள வாஹேஸ்வரர் கோவிலிலிருந்து கிடைத்த பதினேழாம் நூற்றாண்டுக் கல்வெட்டானது தேவதாசிகளின் ஒழுக்கச் சிதைவைக் குறித்த சில ஆதாரங்களைக் கொடுக்கிறது. அதில், வடிவுலமங்கல் என்ற தேவதாசி, ஒரு பார்ப்பனருடன் தகாத நிலையில் இருந்ததை அதிகாரிகள் கண்டறிந்ததாகக் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (Pudukkottai State Inscription (P.S.I.) No. 904: 595–596.) மேலும், தேவதாசிகளைக் கோவில் அர்ச்சகர்கள் சுரண்டினர் என்பதும் இங்கே குறிப்பிடவேண்டும். 1239 ஆம் ஆண்டுக்குரிய சிவபுரம் கல்வெட்டு, கோவிலில் இருந்த இரு சிவப்பிராமணர்கள் தேவதாசிகளுடன் கொண்டிருந்த ஒழுக்கமற்ற நடத்தைப் பதிவு செய்கிறது. (Annual Report of Indian Epigraphy (A.R.I.E.) of 1927. No. 297. Annual Reports for 1927. part. II. paragraph no. 30.)

**தனிப்பாடல்களில் தேவதாசி**

சிற்றிலக்கியங்களில் தூது இலக்கியமும், தனிப்பாடல் திரட்டும் தேவதாசிகளின் சமூக வாழ்க்கை, பிரச்சனைகள் மற்றும் அவர்களைச் சூழ்ந்திருந்த முரண்பாடுகள் பற்றிய முக்கியமான செய்திகளை வெளிப்படுத்துகின்றன. இடைக்கால இலக்கியங்கள், தேவதாசிகள் மற்றும் வேசிகள் ஆகிய இருவரையும் வேறுபடுத்திப் பார்க்கின்றன. அக்காலத்தில் “தாசி” என்ற சொல் கோவிலில் அர்ப்பணிக்கப்பட்ட பெண்களைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டது, அதே சமயம் “வேசி” என்ற சொல் பாலியல் தொழிலில் ஈடுபட்டவர்களைச் சுட்டிக்காட்டும் விதத்தில் இருந்தது. இந்த வேறுபாட்டை அக்கால இலக்கிய ஆசிரியர்கள் நன்கு புரிந்திருந்தனர். இலக்கியத்தில் தேவதாசிகள் தனித்துவமான நிலையை வகித்திருந்தனர் என்பதையும், அவர்கள் கோவிலின் கட்டமைப்பில் இருந்தாலும் சுரண்டல்களுக்கும், சமூக விமர்சனங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர் என்பதையும் அறிய முடிகிறது. இடைக்காலக் கவிஞர்களான அருணகிரிநாதரும், காளமேகமும் முதலானவர்களின் படைப்புகள், தேவதாசிகள் எதிர்கொண்ட சிக்கல்களை நேரடியாக எடுத்துரைத்துள்ளன. (Sadasivan, K. 1993: 150-151.)

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர், சைவ சமயத் துறவியாக இருந்தவர், அவருடைய புகழ்பெற்ற படைப்பு திருப்புகழ் முருக பக்தி நூலாகும். அவர் பற்றிய வாழ்க்கை வரலாறு அருணகிரிநாதர் புராணம் என அழைக்கப்பட்டது. அந்தப் புராணத்தில், திருவண்ணாமலைக் கோவிலின் தேவதாசிகளுடன் அவருக்கு இருந்த நெருங்கிய தொடர்புகள் தெளிவாக வெளிப்படுகிறது. புராணம் தேவதாசிகளை “கணிகைகள்” என வரையறுத்து, அவர்கள் திருவண்ணாமலையின் இறைவனான சிவபெருமானின் திருமணத் துணைவியரெனக் குறிப்பிடுகிறது. தேவதாசிகள் ஒரே தாயால் பிறந்து, பல்வேறு தந்தைகளைக் கொண்டவர்கள் என்கிற சுட்டுமொழியும் இப்புராணத்தில் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு, அருணகிரிநாதரின் படைப்புகள், ஒரு சாதாரண மனிதன் கோவிலின் தேவதாசிகளுடனான சந்திப்பு, அவர்களுடனான உறவுச் சிக்கல்கள் போன்ற அனுபவங்களை வெளிப்படுத்துபவையாகக் காணப்படுகின்றன. இதன்

மூலம், தேவதாசிகள் புனித நிலையை உடையவர்களாக இருந்தாலும், மனித உறவுகளின் சிக்கல்களில் சிக்கியிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

இதேபோல், பதினைந்தாம் நூற்றாண்டின் முக்கியக் கவிஞரான காளமேகம், விஜயநகரப் பேரரசர் இரண்டாம் விருபாக்ஷராயரின் (1485–1466) காலத்துக்குரியவர். அவர் முதலில் வைணவ சமயத்தை பின்பற்றியிருந்தும் பின்னர் சைவ சமயத்திற்கு மாறினார். காளமேகத்தின் பாடல்கள் தனிப்பாடல் திரட்டு எனத் தொகுக்கப்பட்டுள்ளன, இவை தேவதாசிகளும் வேசிகளும் எதிர்கொண்ட பிரச்சனைகளை விரிவாக விவாதிக்கின்றன. காளமேகம் ஒழுக்கமற்ற வாழ்க்கை நடத்தினவர் எனக் குறிப்பிடப்படுகிறார்; தேவதாசிகளுடன் அவர் நெருங்கிய உறவுகள் வைத்திருந்தது அவரது படைப்புகளிலிருந்து வெளிப்படுகிறது. அவரது பாடல்கள் சில நேரங்களில் தேவதாசிகளைப் புகழ்ந்து கொண்டாடுகின்றன; சில வேளைகளில் அவர்களைக் கடுமையாக விமர்சித்துப் சபிக்கின்றன. குறிப்பாக, திருவானைக்கா கோவிலின் தேவதாசியான மோகனாங்கியுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு குறிப்பிடத்தக்கது. அதுபோல், திருவாரூரைச் சேர்ந்த தேவதாசியான சோமியின் அழகை அவர் பாடல்களில் புகழ்ந்தார். சோமியின் அழகைக் கண்ட விஷ்ணுவும் பிரம்மாவும் அதிசயித்ததாக அவர் குறிப்பிட்ட பாடல் (தனிப்பாடல் திரட்டு. பாடல் எண். 46.) சோமியின் தெய்வீகமான அழகையும், தேவதாசிகளின் சிறப்பையும் வெளிப்படுத்துகிறது. மேலும், மதுரையில் வாழ்ந்த குத்தாள், அவளது அக்கா, தாய், பாட்டி ஆகிய தேவதாசிகளின் கண்களைப் பல்வேறு பொருட்களுடன் ஒப்பிட்டு காட்சிப்படுத்தியுள்ளார். (தனிப்பாடல் திரட்டு. பாடல் எண். 48.) அதேபோல், கமலாட்சி எனும் தேவதாசியை அவர் கூர்மையான வேலுக்கு ஒப்பான கண்கள் கொண்டவளாகப் புகழ்ந்தார். (தனிப்பாடல் திரட்டு. பாடல் எண். 181.)

ஆனால், காளமேகத்தின் படைப்புகள் தேவதாசிகளை மட்டுமே புகழ்ந்து கொண்டாடுவதில் முடிவதில்லை. அவர்களுடனான உறவுகளில் ஏற்பட்ட மோதல்களும், கருத்து வேறுபாடுகளும் அவரின் பாடல்களில் சாபங்களாகவும், கடுமையான கேலிகளாகவும் வெளிப்படுகின்றன. உதாரணமாக, இஞ்சிக்குடியில் கலைச்சி என்ற தேவதாசியுடன் உடலுறவு கொண்ட அவர், பின்னர் ஏற்பட்ட சிக்கலால் அவளைச் சபித்து, அவளின் உடலைப் பாகற்காய், உலக்கை போன்ற பொருட்களுடன் ஒப்பிட்டார். (தனிப்பாடல் திரட்டு. பாடல் எண். 38.) நாகப்பட்டினம் தேவதாசியின் குரலைக் கழுதையின் குரலுடன் ஒப்பிட்டார். (தனிப்பாடல் திரட்டு. பாடல் எண். 40.) மேலும், தெலுங்குப் பேசும் தேவதாசிகளின் மொழியை அவர் கேலிக்குரியதாகச் சித்திரித்தார். (தனிப்பாடல் திரட்டு. பாடல் எண். 205.) காளமேகம் வேசிகளை பல்வேறு விலங்குகளும் தாவரங்களும் (குரங்கு, வெற்றிலை, தென்னை, பனை) போன்றவற்றோடு ஒப்பிட்டு, அவர்கள் சுரண்டுபவர்களாகவும், பொருள் முழுவதும் அழியும் வரை ஒட்டிக்கொண்டிருப்பவர்களாகவும் விவரித்தார். (தனிப்பாடல் திரட்டு. பாடல் எண்கள். 143 ,141–139.)

இதனால், அருணகிரிநாதரும் காளமேகமும் படைப்புகளின் மூலம், இடைக்கால சமூகத்தில் நிலவிய தேவதாசிகளைப் பற்றிய பார்வைகளை வெளிப்படுத்தினர். தேவதாசிகள் கோவிலின் சேவைப் பெண்களாக மதிக்கப்பட்டாலும், அவர்களுடன் தொடர்புடைய சுரண்டல், விரோதம், பாராட்டு, கேலி ஆகிய முரண்பாடுகள் இலக்கியத்தில் பிரதிபலித்தன. இவ்வாறு, தேவதாசிகளை மையமாகக் கொண்ட இலக்கியங்கள், சமூகத்தின் இரட்டை நிலைப்பாட்டையும், மதமும் மனித உறவுகளும் இடையே நிகழ்ந்த மோதல்களையும் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

பதினாறாம் நூற்றாண்டு தமிழ்க் காவியமான உடையார் கதை, திருநெல்வேலியிலுள்ள நெல்லையப்பர் கோவில் மற்றும் தென்காசியிலுள்ள காசிவிஸ்வநாதர் கோவில் தேவதாசிகளின் தாழ்ந்த வாழ்க்கையைச் சித்திரித்தது. அந்தக் கதையில், நெல்லையப்பர் கோவில் தேவதாசிகள், செல்வம் உடையவருடன் ஒர் இரவு பகிர்ந்துகொள்ள வாக்குவாதம் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. (Sadasivan, K. 1993: 151.) மேலும், அந்தச் செல்வந்தர் தென்காசி கோவிலின் நல்லமங்காள் என்ற முறைகாரியான (தேவதாசி) உடன் வாழ்ந்ததாகவும் குறிப்பிடுகிறது. (Sadasivan, K. 1993: 151.)

**தேவதாசி வாழ்வியலும், விறலிவிடு தூதும்**

தமிழ் இலக்கியத்தில் “விறலிவிடு தூது” எனப்படும் வகை ஒரு தனித்துவமான மற்றும் முக்கியமான இடத்தைப்பெற்றது. குறிப்பாக 1600 முதல் 1750 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இது பெரிதும் வளர்ச்சி பெற்றது. இவ்வகை பாடல்கள் பெரும்பாலும் தேவதாசிகள் மற்றும் பாடலாசிரியர்கள், குறிப்பாகப் பார்ப்பனர்களுக்கிடையேயான உறவைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருந்தன. விறலிவிடு தூது பாடல்கள், விறலி எனப்படும் பெண் தூதுவர் மற்றும் தலைவன் இடையிலான உரையாடல் வடிவில் அமைந்ததால் “தூது பாடல்கள்” என்ற பெயரைப் பெற்றன. இப்பாடல்களின் மையக்கருத்து தேவதாசி பெண்களின் ஒழுக்கமும், அவர்களின் தவறுகளும், மேலும் அவர்களின் பாலியல் வாழ்க்கையும் ஆகும்.

பாடல்களின் வடிவம் பெரும்பாலும் ஒரே மாதிரியான நிகழ்வுகளைக் கொண்டதாக இருந்தது. கல்வியறிவு பெற்ற, தீவிர மத நம்பிக்கையுடைய பார்ப்பனர் கதாநாயகனாகக் காட்சியளிப்பார். குடும்பத்தில், குறிப்பாக மனைவியுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அவர் புனித யாத்திரைக்குப் புறப்பட்டு, அதன் இறுதியில் தேவதாசியின் அழகும் நடனத்தையும் கண்டு அவளிடம் காதலுருவார்/மையல்கொள்வர். இதன் விளைவாகத் தனது செல்வத்தை முழுமையாக அவளிடம் செலவிடுவார். பொருளாதார சிக்கல்கள் ஏற்பட்டவுடன், தேவதாசியின் குடும்பம் அவரைத் தங்கள் இல்லத்திலிருந்து வெளியேற்றும். ஆனால், கதையில் தலைவனாவன் அவளை விட்டு விலக மறுப்பார். அதனால் கோபமடைந்த தலைவன் கிராம சபையில் புகார் அளிப்பார். ஆனால், சபை அந்த விண்ணப்பத்தை நிராகரிப்பதோடு, அவரை நையாண்டியும் செய்யும். இதன் பின்னர், அவர் தேவதாசியைக் குறைச்சொல்லத் தொடங்கி, தனது நிலையை ஒர் உள்ளூர் தலைவனிடம் எடுத்துரைப்பார். அந்தத் ஊர்த் தலைவன் கதைத் தலைவனின் புரவலனாக மாறுவார். இறுதியில் தலைவன் தன் வாழ்க்கை அனுபவத்தை விறலியிடம் பகிர்ந்து, அவள் மூலம் தனது மனைவியுடன் மீண்டும் இணைவதற்கான ஆசையை வெளிப்படுத்துவார்.

இந்த வகையில் தெய்வச்சிலையார் விறலிவிடு தூது, மூவரையன் விறலிவிடு தூது, சேதுபதி விறலிவிடு தூது, நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடு தூது, கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது போன்ற படைப்புகள் அடங்கும். இவற்றுள் தெய்வச்சிலையார் விறலிவிடு தூது பழமையானதாகக் கருதப்படுகிறது. (மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் இயற்றிய மூவரையன் விறலி விடுதூது. 1982: I.) இந்தப் பாடலைக் குமாரசுவாமி அவதானி, திருநெல்வேலிக்கு அருகில் உள்ள கிருஷ்ணபுரம் தெய்வச்சிலைப் பெருமாள் முதலியாரைப் புகழ்ந்து பாடியதாக அமைகிறது. கதாநாயகனாகத் தோன்றும் நடலிங்கப்பட்டன், தனது மனைவி மற்றும் பிள்ளைகளோடு வாழ்ந்தவர். குடும்பச் சச்சரவுகள் காரணமாக அவர் கிருஷ்ணபுரம், நெய்வேலி, திருவிடைமருதூர், பிரமதேசம், பாபநாசம், புன்னைவனம் போன்ற புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டார். புன்னைவனத் திருக்கோவிலில் சித்திரைத் திருவிழா நடந்தபோது, அதிரூபரத்தினம் என்ற தேவதாசியின் நடனத்தைக் கண்டார். அவளது அழகில் மயங்கிய அவர் தன் செல்வத்தை முழுவதும் அவளுக்காகச் செலவிட்டார். ஆனால், அதிரூபரத்தினத்தின் குடும்பம் பின்னர் அவரை விட்டு விலகியது. இதனால் விரக்தியடைந்த நடலிங்கப்பட்டன் கிராம சபையில் புகார் அளித்தபோதும் அது நிராகரிக்கப்பட்டது. மனக்கவலையுடன் அவர் கிருஷ்ணபுரம் தெய்வச்சிலைப் பெருமாள் முதலியாரைச் சந்தித்தார். அவர் தலைவனின் துயரத்தை உணர்ந்து பெரும் செல்வத்தைப் பரிசாக அளித்தார். பின்னர் நடலிங்கப்பட்டன் தனது அனுபவங்களை விறலியிடம் பகிர்ந்து, தனது மனைவியிடம் எடுத்துச் செல்லும்படி அவளிடம் வேண்டினார்.

மூவரையன் விறலிவிடு தூது (மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் இயற்றிய மூவரையன் விறலி விடுதூது. 1982: I.) என்ற படைப்பு பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதை மல்லைச் சிற்றம்பலக் கவிராயர் இயற்றினார். இது திருமலை நாயக்கர் காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. கதாநாயகனாகச் சாந்தை நகர் வாசுதேவ மறையோன் தோன்றுகிறார். இவருக்கு அபிராமி, மோகவல்லி என்ற இரண்டு மனைவிகள் இருந்தனர். அவர்களுக்கிடையேயான சச்சரவால் வாசுதேவன் வீட்டைவிட்டு வெளியேறி,

திருப்பதி, காளத்தி, சிதம்பரம், திருவாரூர், தஞ்சாவூர், திருவையாறு, திருப்பெருந்துறை, காளையார்கோவில், திருப்புல்லாணி, திருப்புணலூர், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற புண்ணியத் தலங்களில் சுற்றிப் பயணித்தார். அந்தப் பயணத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிலில் பணிபுரிந்த காமகலாவாணியின் மகள் இந்திராணியைச் சந்தித்தார். அவளைத் தேவதாசியாகப் பெற 800–700 பொன் செலவாகும் என்று அறிந்தார். அதில் 120 பொன் ஓர் இரவுக்காகவும், 10 பொன் சுகந்தங்களுக்கு, 10 பொன் படுக்கைக்கு, 20 பொன் தரகர் கட்டணமாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. வாசுதேவன் அவளிடம் மயங்கி, தன் செல்வத்தை முழுவதும் அவளுக்காகச் செலவிட்டார். அவளது மொழித்திறமை, இசை, நடன நயம் போன்றவற்றைக் கண்டு பெரிதும் கவரப்பட்டார். (மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் இயற்றிய மூவரையன் விறலி விடுதூது. 1982: xxv.) பின்னர் அந்தத் தேவதாசி அவரை விட்டு விலகினாள். துயரத்தில் வாசுதேவன் மூவரையன் எனும் புரவலரைச் சந்தித்து, அவரால் தனது வாழ்க்கையை மீட்டார்.

சரவணப்பெருமாள் கவிராயரின் சேதுபதி விறலிவிடு தூது (சரவணப்பெருமாள் கவிராயர். 1947.) மற்றொரு குறிப்பிடத்தக்க படைப்பாகும். இதில் அவதானி என்ற பார்ப்பனர், இன்பவள்ளி என்ற தேவதாசியுடன் கொண்டிருந்த தனிப்பட்ட அனுபவம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. விறலி இலக்கிய மரபுப்படி, அவதானி உத்திரகோசமங்கைத் திருவிழாவில் இன்பவள்ளியைச் சந்தித்தான். இதன் விளைவாக அவனது குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்பட்டன. பின்னர் அவன் புனிதப் பயணம் மேற்கொண்டு திருமருதூரை அடைந்து, அங்கு மோகனமுத்து என்ற தாசியைப் பார்த்தார். (சரவணப்பெருமாள் கவிராயர். 1947: v-vi.) அவளைப் பார்த்தவுடன், அவனது அழகைச் சிறப்பித்து, அவளை மானின் கண்களோடு, வேலின் கூர்மையோடு ஒப்பிட்டான். (சரவணப்பெருமாள் கவிராயர். 1947: ix.) ஆனால், பின்னர் அவளுடன் ஏற்பட்ட பிரிவால் அவதானி மனஅழுத்தத்திற்கு உள்ளானார். அவரது எண்ணத்தில், அவளைப் போலான தாசிகளுக்குச் செல்வத்தைச் செலவிடுவதற்குப் பதில், அறப்பணிக்காகவே அந்தச் செல்வத்தைச் செலவிட்டிருக்க வேண்டுமென்று குறித்தார். (சரவணப்பெருமாள் கவிராயர். 1947: xii.) மேலும் அவளது குணநலன்களை விமர்சித்து, எல்லாத் தாசிகளிலும் அவள் மிக மோசமானவள் எனக் குறிப்பிட்டார். . (சரவணப்பெருமாள் கவிராயர். 1947: 24.)

மற்றொரு தூது இலக்கியமான நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலி விடுதூது திருப்பதியைச் சேர்ந்த சோடச அவதானியின் கதையை விவரிக்கிறது. அந்தக் கதையில், அவதானி திம்மபட்டரின் மகளைத் திருமணம் செய்ததாகக் கூறப்படுகிறது. திருமணம் நடந்தாலும், அவன் தனது குடும்ப வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியடையவில்லை. மனஅமைதி இழந்த அவதானி, தனது வாழ்வின் குறைகளை மறக்கவோ, புதிய வாழ்க்கை வழிகளைத் தேடவோ, பல புனிதத் தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டார். அவர் சென்ற புனித தலங்களில் திருவொற்றியூர், சிதம்பரம், திருவானைக்கா, பழனி ஆகியவை முக்கியமானவை. இந்த யாத்திரையின் போது, அவர் பழனிக் கோவிலில் மணமாலையின் மகளான காமரசக் குளிகை கண்ணாடியைச் சந்திக்கிறார். அவள் கோவிலின் நடன மண்டபத்தில் ஆடி மக்களையும், பக்தர்களையும் கவர்ந்தவள். வழக்கம்போல, அவதானி அவளின் அழகு மற்றும் கவர்ச்சியில் சிக்கிக் கொண்டு, தன் செல்வங்களையும், தனிப்பட்ட மரியாதையையும் இழந்துவிடுகிறார். பிறகு, மனமுடைந்து புனலாடி சங்கமேசுவரரிடம் ஒரு சிறிய கொடை வேண்டுகிறார். (நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலி விடுதூது. 1969.)

அவதானியின் மனக்குமுறலை வெளிப்படுத்தும் புலம்பல் இந்தக் கதையின் சுவாரஸ்யமான பகுதி ஆகும். அவன் தன்னைத்தானே வஞ்சிக்கப்பட்டவனாக உணர்கிறார். அவளுக்காக அவன் பட்டு, மாலைகள், இன்பங்கள் போன்றவற்றை அளித்தாலும், அதற்குப் பதிலாக அவன் பெற்றது நோயும் துன்பமும் மட்டுமே என்கிறார். இந்த மனக்கவலையைக் காட்டும் அவதானியின் புலம்பல், அவர் பாடிய வரிகளில் வெளிப்படுகிறது. (நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலி விடுதூது. 1969: 10.)

பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது, நிலக்கோட்டைச்

சேர்ந்த சுப்ரதீபக் கவிராயரின் படைப்பாகும். இதில், ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த அட்டாவதானியின் வாழ்க்கை கதையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவரது மனைவி பூங்காவனம் என்றாலும், அவரின் தாசிகளுடனான தொடர்புகள் குடும்ப உறவுகளை முற்றிலும் சிதைத்துவிடுகின்றன. குடும்பம் சீர்குலைந்ததால், அவன் தன்னை மீட்டுக்கொள்ளவும், பாவமன்னிப்பு பெறவும் இந்தியத் துணைக்கண்டத்தின் பல புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்கிறார். அவன் சென்ற இடங்களில் திருவானைக்கா, தென்மதுரை, திருமறைக்காடு, முதுகுன்றம், சிவசமுத்திரம், திருக்கழுகுன்றம், அவிநாசி, செங்கட்டாங்குடி, சிதம்பரம், திருக்களத்தி, காசி, ஆழ்வார்திருநகர், கிருஷ்ணபுரம், குற்றாலம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்சுழி, திருப்புவனம், சோலைமலை போன்ற புனிதத்தலங்கள் குறிப்பிடத்தக்கவை.

சோலைமலையில், அவரைச் சந்தித்த முகமறியாத ஒரு சாமியார், அவனுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். திருவொற்றியூரின் தாசியரின் ஆடம்பரங்களும், கவர்ச்சிகளும் எவ்வாறு அரசர்களையும் அரசுகளையும் வீழ்த்தின என்பதை எடுத்துக்கூறுகிறார். குறிப்பாக, கொந்தி மன்னன் தாசியின் வலையில் சிக்கி, தனது அரசினையே இழந்தான் என்று எடுத்துக்காட்டுகிறார். இருந்தபோதும், அவதானி அந்தச் சாமியாரின் அறிவுரைகளைக் கவனிக்காமல், மதுரையின் மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் செல்கிறார். அங்கு அவன் மாணிக்கமாலையின் மகளான மதனாபிஷேகத்தைக் காண்கிறார். மாணிக்கமாலை கோவிலில் வழிபாடற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவளாக இருந்தாலும், அவளது மகள் சிறந்த தாசியாகப் பெயர் பெற்றவள். அந்தக் கதையின்படி, அவள் ஒரு மருந்தைப் பயன்படுத்தி அவதானியை மயக்கி, பின்னர் அவனைத் தன் வீட்டிலிருந்து வெளியேற்றுகிறாள். மனமுடைந்த அவதானி, நிலக்கோட்டையின் நாகேந்திர பூபதியைச் சந்தித்து, அவருடன் இணைந்து செல்வம் ஈட்டத் தொடங்குகிறார். (சுப்ர தீபக் கவி. கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது.)

#### முடிவுரை

இந்தச் சிற்றிலக்கியங்களின் மொத்தமான பார்வை, ஒரே மாதிரியான வடிவத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. கதையின் மையமாக நிற்பவர் எப்போதும் ஒரு பாடகர் அல்லது அவதானி; பெரும்பாலும் பார்ப்பனச் சமூகத்தைச் சேர்ந்தவராகவே சித்தரிக்கப்படுகிறார். அவர்களின் குடும்ப வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்பட்டதும், அவர்கள் இந்திய துணைக்கண்டத்தில் உள்ள முக்கியமான பார்ப்பனீயக் கோவில்களுக்குப் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர். அங்குச் சென்றபோது, அவர்கள் எந்தக் கோவிலின் தாசியராயினும், அவர்களின் அழகும் கவர்ச்சியும் இவர்களைச் சிக்கவைக்கிறது. இவ்வாறு, அவர்கள் தங்கள் செல்வங்களைத் தாசியருக்குக் கொடுத்து, பின்னர் அவற்றிலிருந்து வஞ்சிக்கப்பட்டு, தாசியரின் வீட்டிலிருந்து விரட்டப்படுகிறார்கள்.

இந்தக் கதைகளில் தாசியரின் தாயார் முக்கியமான பாத்திரமாகச் சித்தரிக்கப்படுகிறார்; அவர் தான் குடும்பத்தில் மிகுந்த அதிகாரம் செலுத்துபவர். பாடகர்கள் பின்னர் பொதுச்சபைகளில் தங்கள் துயரங்களை வெளிப்படுத்தினாலும், அவர்களின் மனுக்கள் கவனிக்கப்படுவதில்லை. சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட பாடகர்கள், எப்போதாவது உள்ளூர் தலைவர்களின் ஊர்வலங்களில் கலந்துகொண்டு சிறிய நிதியுதவிகளைப் பெறுகின்றனர். அந்தத் தலைவர்கள் பெருந்தாராளர்களாகச் சித்திரிக்கப்படுகிறார்கள். கடைசியாக, பாடகர்கள் தூதுவனைச் சந்தித்து, தங்கள் சிதைந்த குடும்ப வாழ்க்கையுடன் மீண்டும் இணைய உதவியை வேண்டுகிறார்கள்.

**துணைநூற்பட்டியல்**


Sadasivan, K. (1993). Devadasi System in Medieval Tamilakam. Trivandrum: CBH Publications.

சரவணப்பெருமாள் கவிராயர். (1947). சேதுபதி விறலிவிடு தூது. காரைக்குடி: இலக்கியப் பதிப்பகம்.

சுப்ர தீபக் கவி. கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது. காரைக்குடி: ராய. சொக்கலிங்கன்.

தனிப்பாடல் திரட்டு.

நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலி விடுதூது. (1969). ஸ்ரீரங்கம்: ஸ்ரீ வாணி விலாச அச்சகம்.

மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் இயற்றிய மூவரையன் விறலி விடுதூது. (1982) சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.